**இயக்குநர்(மு.கூ.பொ.), அரசினர் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை ஆணை**

முன்னிலை: மரு. வ. சீனிவாசன், எம்.டி.(ஆர்.ட்டி.), டி.எம்.ஆர்.ட்டி.,

ந.க.எண் 910/நி/2010 நாள்13 .03.2023.

பொருள்: பணியமைப்பு – திரு. இரா. வில்சன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் - பணி வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடல் - தொடர்பாக.

பார்வை:

1. மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10 அவர்களின் செயல்முறை ஆணை எண் 63127/நி2/4/1996 நாள் 01.03.2001.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண் 402/நி/2001 நாள் 21.03.2001.
3. மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10 அவர்களின் பணி நியமன ஆணை எண் 85890/நி2/4/2001 நாள் 04.03.2002.
4. மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10 அவர்களின் கடித ந.க.எண் 76234/நி2/5/2017 நாள் 14.02.2020.
5. இவ்வலுவலகக் கடித ந.க.எண் 910/நி/2010 நாள் 02.06.2022
6. முதல்வர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை – 1 அவர்களது கடித ந.க.எண் 3943/நி1/2/2004 நாள் 05.09.2022, மருத்துவக் கல்வி இயக்குநருக்கு முகவரியிடப்பட்டது.
7. அரசாணை (நிலை) எண் 80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை நாள் 02.03.2016.
8. மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10 அவர்களின் கடித ந.க.எண் 78830/நி2/4/2022 நாள் 02.12.2022 முதல்வர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை – 1 அவர்களுக்கு அனுப்பப்பட்டு, நகல் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டது.
9. முதல்வர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை – 1 அவர்களது கடித ந.க.எண் 3943/நி1/2/2004 நாள் 25.01.2023.

--------

ஆணை:

இந்நிலையத்தில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்துவந்த திரு.ஏ. இராஜமாணிக்கம் என்பவர், தன்து பணிக்காலத்தில், கடந்த 27.10.1995 அன்று காலமானார். இவர், தகுதிகாண் பருவம் முடித்தவர். அன்னாரின் பிறந்த தேதி 25.12.1943 என்பதால், உத்தேசமாக, பணியிலிருந்து ஓய்வு பெறும் தேதி, 31.12.2003.

அவர் 27.10.1995 அன்று இறந்ததைத் தொடர்ந்து, அவரது மகனான திரு. இரா. வில்சன் என்பவர், கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக, பணி நியமனம் வழங்கக் கோரினார். அவர், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்படுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளார். அவரின் பிறந்த தேதி, 15.11.1974. திரு.

இரா. வில்சன், என்பவருக்கு தற்காலிகமாக, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, இந்நிலையத்தில், 21.03.2001 அன்று முற்பகலில் பணியில் இணைந்தார். எனவே, 35 வயது முடிவடைவதற்கு முன்பாகவே, பணியில் இணைந்துள்ளார்.

பார்வை 7ல் காணும் அரசாணையில், 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வும் தேவைப்படாத அனைத்து நபர்களின் பணி வரன்முறைக்கும் நியமன அலுவலரே ஆணை வெளியிட வேண்டும் என்றும், உரிய பணிப்பதிவேட்டுப் பதிவுகள் மேற்கொண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டு எல்லைக்குள் வரும் பதவிகளில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு, தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு உரிய முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும், அதுவரை அந்த அரசு ஊழியரை தற்காலிகப் பணியாளராகக் கருதி, நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளை வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 8ல் காணும் மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10 அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறும், பார்வை 7ல் காணும் அரசாணையின்படியும், 01.02.2016க்கு முன்பாக அரசுப் பணியில் இணைந்துள்ள இவருக்கு, நியமன அலுவலர் என்ற முறையில், எவ்வித விதித் தளர்வும் தேவைப்படாத நிலையில், திரு. இரா. வில்சன் அரசுப் பணியில் இளநிலை உதவியாளராக இணைந்த நாளான 21.03.2001 முற்பகல் முதல், அவரது தற்காலிகப் பணிகளை வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

தற்காலிகப் பணிகள் வரன்முறை செய்யப்பட்ட நாளான 21.03.2001 முற்பகல் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

மேலும், பார்வை 7ல் காணும் அரசாணையில் காணும் அறிவுரைகளின்படி, இவரது பணி வரன்முறை குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாறு பணி வரன்முறை செய்ததற்கு அரசின் இசைவினைப் பெற உரிய கருத்துரு பின்னர் அனுப்பப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13.3.23

இயக்குநர் (மு.கூ.பொ.).

13/3/2023

பெறுநர்
திரு. இரா. வில்சன்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்,
காஞ்சிபுரம் - 1.

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:</u>
மருத்துவக் கல்வி இயக்குநர்,
சென்னை – 600 010 – தகவலுக்காக

நகல்: 1. பணிப்பதிவேடு
2. முதல்வர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை,
சென்னை – 600 001.

உதிரி.